**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலன்– மாற்றுத் திறனாளிகளின் நல வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் சமூக பாதுகாப்பு திட்டங்களை 2014–2015 ஆம் நிதியாண்டில் தொடர்ந்து செயல்படுத்திட திட்டத் தொடராணை மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.28 நாள்:31–03–2015

ஜய, பங்குனி 17,

திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்க:

1. அரசாணை(நிலை) எண்.12, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 07–03–2014.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.2510/த.நா.மா.தி.நவா/2014, நாள் 06.11.14.
3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.3311/ தநாமாதிநவா/2013, நாள் 16.2.15 மற்றும் 26.2.15.

------

**<u>ஆணை:</u>**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தின் மூலம், செயல்படுத்தப்படும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை, 2013–2014 ஆம் நிதியாண்டில் தொடர்ந்து செயல்படுத்திட திட்டத் தொடராணையும் மற்றும் சமூக பாதுகாப்பு திட்டங்களுக்கான ரூ.85.00 இலட்சமும், நிர்வாகச் செலவினத்திற்காக ரூ.15.00 இலட்சமும் என ஆக மொத்தம் ரூ.1.00 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடப்பட்டது.

2. மேலும், இவ்வரசாணையில், ஒப்பளிக்கப்படும் மேற்கண்ட நிதியினை செலவு செய்திடவும், இச்செலவினம் குறித்து தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தில், பின்னேற்பாணை பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தல்கள் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு வழங்கப்பட்டுள்ளன.

3. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதங்களில், தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவிகள் வேண்டி, நல வாரிய உறுப்பினர்களிடமிருந்து விண்ணப்பங்கள் தொடர்ந்துவந்தவண்ணம் இருப்பதால், இவ்வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும், சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை, 2014–2015 ஆம் ஆண்டிலும் தொடர, திட்டத் தொடராணையும் மற்றும், சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்காக ரூ.95.00 இலட்சம் மற்றும் நிர்வாகச் செலவிற்காக ரூ.5.00 இலட்சமும் என ஆக மொத்தம் ரூ.1.00 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், வாரியத்தின் தன்வைப்பு கணக்கில் நிலுவையில் உள்ள தொகை ரூ.3,53,098/–ஐ, 2014–15 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்தின் கீழ் பெறப்பட்டு நிலுவையில் உள்ள விண்ணப்பங்களை தீர்வு செய்வதற்கு பயன்படுத்திக் கொள்ள ஆணை வழங்குமாறும் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேற்காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் சமூக பாதுகாப்புத் திட்டங்களை, 2014–15 ஆம் நிதியாண்டில் தொடர, திட்டத் தொடராணையும், மற்றும் 2013–14 மற்றும் 2014–15 ஆம் ஆண்டில் நிலுவையில் உள்ள 1357

விண்ணப்பங்களை தீர்வு செய்ய சமூக பாதுகாப்பு திட்டங்களுக்காக மொத்தம் ரூ.95.00 இலட்சம் மற்றும் நிர்வாகச் செலவிற்காக ரூ.5.00 இலட்சமும் என மொத்தம் ரூ.1.00 கோடி ( ரூபாய் ஒரு கோடி மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. மேலும், இந்நேர்விற்காக, வாரியத்தின் தன்வைப்பு கணக்கில் நிலுவையில் உள்ள தொகை ரூ.3,53,098/–ம்(ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பது மூன்றாயிரத்து தொண்ணூற்று எட்டு மட்டும்) பயன்படுத்திக் கொள்ளவும், இச்செலவினத்தினை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2235–சமூகப் பாதுகாப்பும் நலனும்–02–சமூக நலன்–101–மாற்றுத் திறனாளிகள் நலன் –I திட்டத்தில் சேராதது–CK- மாற்றுத் திறனாளிகளுக்கான நல வாரியத்திற்கு மானியங்கள்–09 உதவித் தொகை 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை .
(த.தொ.கு..2235–02–101–CK–0934)

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை, உடனடியாக செலவினம் மேற்கொள்ளவும், பின்னர் தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தின் பின்னேற்பாணை பெற்றுக் கொள்ளவும், உறுப்பினர்–செயலர், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்திற்குப் பணமாக வழங்கப்படாமல், இவ்வாரியத்தின் உறுப்பினர் செயலர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் பெயரிலான பின்வரும் தன்வைப்பு கணக்கில் காசோலை / வரைவோலை மூலம் எதிர்வரவாக வரவு வைக்கப்பட வேண்டும்:–

K வைப்பீடுகளும் முன்பணங்களும் (b) வட்டியில்லா வைப்பு தொகைகள் 8443.00 உரிமையியல் வைப்பீடுகள் 800 இதர வைப்பீடுகள் DW தமிழ்நாடு ஊனமுற்றோர் நல வாரியத்திற்கான வைப்பீடுகள்.
DPC 8443 00 800 DW 000C (வரவுகள்)
DPC 8443 00 800 DW 0008 (செலவுகள்)

8. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.13866/நிதி(சந)/2015, நாள்31–03–2015–ன்படி ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
உறுப்பினர்–செயலர்/ மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர்,சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்/ அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் /
அனைத்து தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரிய உறுப்பினர்கள். (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.(பெயரில்)
மாநில கணக்காயர், சென்னை– 18.

<u>நகல்:–</u>
மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை–9.
நிதி (சமூக நலம்)த்துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.